OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11409

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.08.2026

Accepted: 20.09.2026

Published: 01.10.2026

Citation:
Ganapathi, G., and SM Mariyappan. "Feminist Issues in Kavippithan's Short Stories." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 23–28.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11409

*Corresponding Author:
ganapathitamil86@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

Feminist Issues in Kavippithan's Short Stories

G. Ganapathi
Ph.D. Research Scholar (Part-Time), Postgraduate and Research Department of Tamil, Government Arts College for Men, Krishnagiri Affiliated to Periyar University

S.M. Mariyappan
Assistant Professor, Postgraduate and Research Department of Tamil, Government Arts College for Men, Krishnagiri

Abstract
In Indian society, the major obstacles that prevent women from attaining their rights and freedom are social institutions and practices such as family, marriage, culture, and religion. Through these institutions, the patriarchal society subordinates women, relegates them to an inferior position, and perpetuates their oppression. Furthermore, patriarchal forces determine how women should behave and function at every level of society, imposing restrictions on their lives. In his short story Thulirppu, Kavipithan portrays the plight of Chandra, who is expelled from her marital home by her husband and mother-in-law on the grounds that she is "maladi" (a barren woman), as she has not conceived even after eight years of marriage. The people of the village also turn against Chandra, reflecting the patriarchal mindset prevalent in society. Similarly, in the short story Kalabali, Shantha's husband poisons his healthy daughter in an attempt to save his physically ill son. Even after learning the truth, Shantha remains powerless to oppose her husband's cruel act. Through these narratives, the present study highlights how patriarchal society oppresses women, exercises dominance over them, and deprives them of their agency and freedom.

Keywords: *Aravan, Festival, Barren Woman, Heifer, Ritual Offering, Battlefield Sacrifice, Sirisu, Kelij.*

References

1. Kavipithan. Paali: Short Story Collection. December 2021. Vamsi Books, Tiruvannamalai – 606 601.
2. Dr. T. Senthamizhselvi. Women in Manikkodi Short Stories. December 2021. Kudiyarasi Publications, Chromepet, Chennai – 600 044.
3. Aranga Mallika. Feminism in Tamil Novels. February 2009. New Century Book House (P) Ltd., Ambattur, Chennai – 600 098.
4. Aranga Mallika. Feminism in Tamil Short Stories. December 2008. New Century Book House (P) Ltd., Ambattur, Chennai – 600 098.

கவிப்பித்தன் சிறுகதைகளில் பெண்ணியச் சிக்கல்கள்

கா. கணபதி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி

சு.மா. மாரியப்பன்
உதவிப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி

ஆய்வுச் சுருக்கம்

இந்திய சமூகத்தில் பெண்கள் தங்களின் உரிமைகளையும், விடுதலைகளையும் பெருவதற்கு பெருந்தடையாக இருப்பவை குடும்பம், திருமணம், பண்பாடு மற்றும் மதம் போன்ற சமூக சூழல்களே ஆகும். இவற்றைக் கொண்டே ஆணாதிக்கச் சமூகம் பெண்களை தங்களுக்கு கீழான நிலைக்குத் தள்ளி அவர்களை அடிமைப்படுத்துகிறது. மேலும், சமூகத்தின் எல்லா நிலைகளிலும் பெண்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஆணாதிக்க வர்க்கமே தீர்மானிக்கிறது. கவிப்பித்தன் தன்னுடைய துளிர்ப்பு என்ற சிறுகதையில் சந்திராவிற்கு திருமணம் முடிந்து எட்டு ஆண்டுகள் ஆகியும் குழந்தை பிறக்காததால் அவளுடைய கணவரும், மாமியாரும் ‘மலடி’ எனக் கூறி அவளை வீட்டைவிட்டு வெளியேற்றியபோது அவ்வூர் மக்களும் ஆணாதிக்க மனப்பான்மையுடன் சந்திராவிற்கு எதிராகவே இருந்தனர். அதைப்போலவே களபலி என்னும் சிறுகதையிலும் உடல் நலம் சரியில்லாத தன் ஆண் குழந்தையை காப்பாற்றுவதற்காக நல்ல உடல் நலத்துடன் இருக்கின்ற பெண் பிள்ளையை ‘விஷம்’ வைத்து கொல்கிறார் சாந்தாவின் கணவர். இவ்வுண்மை தெரிந்த பிறகும்கூட கணவனின் இக்கொடூர செயலை எதிர்க்கும் திரணற்றவளாகவே சாந்தா இருக்கிறாள். ஆணாதிக்கச் சமூகம் பெண்களை எவ்வாறு ஒடுக்கி ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

திறவுச்சொற்கள்: *அரவான், ஜாத்திரை, மலடி, கடேறி, ஆதாபாதை, களபலி, சீரிசு, கெலீஜ், கவிப்பித்தன், சிறுகதை, திறனாய்வு.*

முன்னுரை

பெண்ணிய நோக்கில் நவீன இலக்கியங்களைத் திறனாய்வு செய்வது பெண் விடுதலை வளச்சிக் கூறுகளுள் ஒன்று. இன்று இலக்கிய உலகில் பரவலாக விவாதிக்கப்பட்டும் எழுதப்பட்டும் வரும் இச்சிந்தனைக் குறித்த கோட்பாடுகள் பெண்கள், குடும்பம் மற்றும் சமூகச் சூழலில் எதிர்கொள்ளும் பாலினப் பாகுபாடு பொருளாதாரம் மற்றும் சாதிய அடக்கு முறைகளை வெளிப்படுத்து பவையாக அமைகின்றன. பெண் சுதந்திரம், பெண்ணுரிமை என்ற சிந்தனைகளைக் குறிப்பிட்ட காலவரையறைக்குள்ளும், குறிப்பிட்ட நிலப்பரப்பிற்குள்ளும் அடக்கக் கூடியதல்ல. பன்னெடுங்காலமாகக் காலந் தோறும் குடும்ப, சமூக, பொருளாதார சூழலுக்கு ஏற்ப பெண்களின் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றத்தை வெளி உலகிற்கு எடுத்துரைப்பதே பெண்ணியத்தின் நோக்கமாகும்.

இன்றைய எழுத்துலகில் குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வியலை இலக்கியங்களில் பதிவு செய்யும் வட்டார

இலக்கியங்கள் அம்மண் சார்ந்த மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்கின்றன. இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளி தான் வாழும் சமூகத்தை ஆழ்ந்து நோக்கி மக்களின் அன்றாட நிகழ்வுகளுக்கு ஒரு கலை வடிவத்தை உருவாக்குகிறான். அதுவே இலக்கியமாக அறியப்படுகிறது. இவ்வகையில் கவிப்பித்தன் தன் சிறு கதைகளில் தன் மண்சார்ந்த சமூகத்தில் பெண்களின் வாழ்வியலை எவ்வாறு எடுத்து உரைத்துள்ளார் என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன்மூலம் உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று சார்லட்பன்ச் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல. சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும். என்று கூறுகிறார்.

துளிர்ப்பு

திருமண வாழ்வைத் தொடங்கும் ஆண்களும் பெண்களும் எண்ணற்ற கனவுகளையும் ஆசைகளையும் தாங்கி கொண்டு கணவன் மனைவியாக அன்பையும் ஆதரவையும் எதிர்நோக்கிக் குடும்ப வாழ்வில் இணைகின்றனர். அவர்களின் எதிர்பார்ப்புகள் நிராசையாக மாறும் பொழுது இருவரிடையேயும் மனமுறிவு ஏற்படுகிறது. திருமணம் செய்துகொண்டு இல்வாழ்க்கையை மேற்கொண்டவர்களிடம் இச்சமூகம் முதலில் எதிர்பார்ப்பது குழந்தைப்பேறு, திருமணமான சில வருடங்களில் குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும் என உறவினர்களும் சமூகமும் எதிர்ப்பார்க்கிறது. குறிப்பாகத் தாய்மை யடையாத பெண்ணை “மலடி” என இச் சமூகம் பழித்துப்பேசுகிறது. குழந்தை பிறக்கவில்லையென்றால் பெண் மீது மட்டுமே குறைகூறும் உறவினர்களும், சமூதாயமும் ஆணை குறையற்றவனாகப் பார்க்கிறது. கவிப்பித்தனின் “துளிர்ப்பு” சிறுகதையில் சதாசிவத்திற்கும் சந்திராவுக்கும் திருமணம் ஆகி எட்டு ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாததால் தன் கணவனால் கைவிடப்படுகிறாள். அவளுடைய மாமியாரும் ஒரு மலட்டுப் பொண்ணக் கட்டி வெச்சிக் கய்த்தறத்துட்டிங்களே இந்த பட்ட மர்த்த வெச்சிகினு இன்னா பண்றது..? (துளிர்ப்பு, ப-160) என ஆவேசமாக கத்தி வீட்டிற்குள் சந்திராவை நுழையவிடாமல் தடுக்கிறாள்.

குழந்தை பிறக்கவில்லையென்றால் பெண் மட்டுமே குறையுடையவளாகக் கருதி உறவுகளாலும் சமூகத்தாலும் பழிக்கப்படுகிறாள். அப்பெண் வீட்டிற்கும், சமூகத்திற்கும் பாரமாகவும் வேண்டாதவளாகவும் கருதப் பட்டுப் புறக்கணிக்கப்படுகிறாள்.

இளம் வயதில் கணவனைப் பிரிந்து வாழும் பெண்ணை மறுமணம் செய்துகொள்ள முன்வராத ஆண்கள், அவர்களுடன் மறைமுகத் தொடர்புகொள்ள மட்டுமே விரும்புகின்றனர். கணவனைப் பிரிந்து தனிமையில் வாழ்பவள் என்பதாலும், பொருளாதாரச் சார்பு இன்றி வறுமை நிலையில் உள்ள குடும்ப சூழ்நிலையை உடையவள் என்பதாலும் மறைமுகமாகத் தன்னுடைய இச்சைக்கு இணங்குவாள் என்று ஆண்கள் எதிர்பார்க்கிறன்றனர்.

சந்திராவின் குலையாத உடல் வனப்பு ஊரில் பல ஆண்களின் ஏக்கப் பெரு மூச்சுசிக்களைக் காற்றோடு காற்றாய் கரைய வைத்தது. ‘மலடி’ தானே என்று பலபேர் அவளைச் சுற்றிச்சுற்றி வந்தனர். அவளின் வீட்டு வாசலில் நிற்கும் வேப்ப மரத்தடியில் எந்நேரமும் தவம் கிடந்தனர். ஆனாலும் தாயைப்போல கணகணக்கும்

நெருப்பாகவே இருந்தாள் சந்திரா. அந்த நெருப்பில் அவளே எரிந்தாள் அவளை அவளே புடம் போட்டுக் கொண்டு மேலும் தகதகத்தாள் (துளிர்ப்பு, ப-162) என்று சிறுகதை ஆசிரியர் கூறுவதிலிருந்து குழந்தை இல்லை எனக் கணவனால் கைவிடப்பட்ட இளம் பெண்ணை ஆண் சமூகம் நய வஞ்சகமாக அடைய முயல்வதைக் காட்டுகிறது. ஆண் துணையின்றி பெண் தனித்து வாழ விரும்பினால் அப்பெண்ணிற்குச் சமூகம் உரிய மதிப்பளிப்பதில்லை. தன் விருப்பப்படி தனியாக வாழும் ஆடவனை அனுமதிக்கும் சமூகம், அவ்வாறு வாழ விரும்பும் பெண்ணை இழிவாகப் பேசுகிறது. மேலும், அப்பெண்ணின் குடும்பத்தையும் ஏளனம் செய்கிறது. திருமணம் என்ற சமூக அமைப்பை விட்டு ஒரு பெண் தனியாக வாழ்வதைச் சமூகம் விரும்புவதில்லை. இதனையே ஆர்.தமிழ்செல்வி பின்வருமாறு கூறுகிறார்.

திருமணம் என்பது கட்டாயம் இல்லை என்னும் உண்மையை மகளிர் புரிந்து கொண்டாலும், பெரும்பாலோர் பாது காப்பின் பொருட்டு அந்த வலையை நாடவேண்டியுள்ளது (ஆர்.தமிழ்ச்செல்வி, தமிழ் நாவல்களில் பெண்ணியம், ப- 43, பிப்ரவரி, 2002)

ஆண் பெண் இருவருக்குமே திருமணம் அவசியமான ஒன்றுதான் என்பது மறுக்க இயலாத உண்மை. ஆனால் பெண் திருமணம் செய்துகொள்ளவில்லையெனில் வாழ்க்கையே அவளுக்கு இல்லை என்னும் மனநிலை சமூகத்தில் வேறூன்றி உள்ளது. இக்கருத்தைப் பிரதிபலிக்கும் விதமாக செண்பகம் தன் மகளுக்கு எப்படியாவது யாரோ ஒருவனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்துவிட வேண்டும் என முடிவெடுக்கிறாள். எந்நேரமும் மாடுகள் இறங்கி மேயத்துடிக்கிற பயிராகச் சந்திராவை எவ்வளவு காலம்தான் வைத்திருக்க முடியும்? கை கால் முடமான யாராவது வந்தால் கூட அவளுக்கு இரண்டாவது திருமணம் செய்து வைத்து விடலாம் எனத் தயங்கித்தயங்கி முடிவெடுத்தாள் செண்பகம் (துளிர்ப்பு, ப - 164)

திருமணம் செய்து கொள்ளாமல் பெண்களால் தனித்து வழ இயலாது என்ற சமூகத்தின் எண்ணத்தைச் செண்பகம் கதாபத்திரத்தின் வழியாகச் சிறுகதை ஆசிரியர் வெளிப் படுத்துகிறார். எனினும் திருமணம் என்பது ஆண் பெண் இருவரையும் அன்பால் இணைக்கும் ஒரு நிகழ்வு என்பதை, ஒவ்வொரு பாதியாய் வளர்ந்து வரும் இரண்டு உயிர் ஆண், பெண் ஒன்றி முழுத்தன்மை எய்திக் கடனாற்றுதற்கு அவைகளை அன்புக்கயிற்றால் இயற்கை பிணைப்பது திருமணம் என்று திரு. வி.க கூறுவது ஏற்புடையதாகும்.

களபலி

ஆண் - பெண் பாகுபாடு என்பது சமூகத்தில் நிலவும் மிக முக்கியமான சமூகப் பிரச்சினையாகும். இது மனித சமுதாயத்தில் ஆண், பெண் இடையிலான சமத்துவ மின்மைக்கு வழிவகுக்கிறது. ஆண் வீட்டிலும் சமூகத்திலும் முதன்மைப்படுத்தப்படுகிறான். தன்னிச்சையாகத் தன் விருப்பப்படி தனது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்கிறான். ஆனால், பெண் என்பவள் வீட்டிலும் சமூகத்திலும் ஆணுக்குக் கட்டுப்பட்டவளாகவே இருக்கிறாள். ஏனெனில் பெண் என்பவள் ஆணைச் சார்ந்து வாழவேண்டும் எனச் சமூகம் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிர்பந்திக்கிறது.

கல்வி வேலை திருமணம் என அனைத்து நிலைகளிலும் பெண்கள் ஆணுக்கு அடுத்த நிலையிலேயே இருக்க வேண்டும் என சமூகம் விரும்புகிறது.

ஆண் என்பவன் வேலைக்குச் சென்று பொருள் ஈட்ட வேண்டும் என்றும், பெண் தன் கணவன், குழந்தைகள் மற்றும் குடும்பத்தார்களுக்குச் சமையல் செய்து

தொண்டு செய்ய வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கிறது. இதனை குறுந்தொகை,

வினையே ஆடவர்க்கு உயிரே
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே
(பாடல் - 135)

எனக் கூறுவதன் மூலம் ஆண் பெண் பாகுபாடு பல நூற்றாண்டுகளாகச் சமூகத்தில் நிலவுவதை உணரமுடிகிறது. இப்பாகுபாடு பின்னாட்களில் பெண் குழந்தைகளைக் கருவிலேயே களைக்கும் கொடூரநிலைக்குப் பெற்றோரைத் தள்ளியது மிகப்பெரும் சமூகச் சீர்கேடாகும்.

கவிப்பித்தன் “களபலி” என்னும் சிறு கதையில் ஆண் பெண் பாகுபாடு சமூகத்தில் எவ்வாறு நிலவியது என்பதை விளக்கியுள்ளார். சாந்தாவிற்குத் திருமணம் ஆன அடுத்த ஆண்டே ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் எனக் கலப்பு இரட்டைக் குழந்தை பிறக்கிறது. இதை ஊரே ஆச்சரியமாகப் பார்க்கிறது. காரணம் இரட்டைக் குழந்தை என்றால் இரண்டும் ஆணாகவோ அல்லது இரண்டும் பெண்ணாகவோ தான் பிறக்கும் இப்படி ஆண் குழந்தை ஒன்றும், பெண் குழந்தை ஒன்றும் பிறப்பது அரிது. அப்படி பிறப்பது நல்லதல்ல எனச் சாந்தாவின் கணவரும் உறவினர்களும் கவலைப்படுகின்றனர். பெயர் வைக்கவே தடுமாறும் சாந்தாவின் கணவர். இறுதியில் சந்திரன், இலட்சுமி எனப் பெயர்வைத்து இருவரையும் வளர்க்கிறார். ஆனாலும் சந்திரனுக்கு உடலநலம் சரியில்லாமல் போனால் அதற்கு இலட்சுமி தான் காரணம் என எண்ணினார். இதை கலப்பு இரட்டையர்கள் குடும்பத்துக்கு ஆகாது என்று யார் யாரோ மாமாவிடம் சொல்லிக்கொண்டிருந்தனர். சந்திரனுக்கு காய்ச்சல், சளி வரும்போதெல்லாம் மாமாவும்கவலைப்பட்டார்(களபலி,ப-18) என்று சாந்தாவின் கணவர் கதாபாத்திரத்தின் வாயிலாக ஆண் பெண் பாகுபாட்டைச் சிறுகதை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

சந்திரனுக்கு ஆறு வயதாகும் போது அவனது உடல்நிலை மிகவும் மோசமானது வைத்தியரிடம் அலையாய் அலைந்தும் உடல்நிலை சரியாகாதபோது இறுதியில் சாமியாரிடம் சென்ற சாந்தாவின் கணவர் அவர் சொன்னதைக் கோட்டு வாய்விட்டு அலறிவிடுகிறார். அரவாங் கள பலிதாங் ரெண்டுல ஒண்ண கலச்சிடு வாழக்கன்ன கலைகிற மாதிரி? (களபலி, ப -19)

வாழைக்கன்று செழித்து வளரவேண்டும் என்பதற்காக அதன் பக்கம் வளரும் கன்றுகளை அறுத்து விடுவதைப் போல் நோய்வாய்ப்பட்ட தன் மகன் சந்திரனைக் காப்பாற்ற நல்ல ஆரோக்கியமான உடல் நலத்துடன் இருக்கும் இலட்சுமியை ‘விஷம்’ வைத்து கொள்கிறார் சாந்தாவின் கணவர். இலட்சுமி இறந்து மூன்றாம் நாள் உண்மை தெரியவே சாந்தா வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அலறுகிறாள். அய்யோ எங்கொலசாமியே.!

இந்த வம்சக் கொடி வளர உங்கோடிய
அற்த்துட்டாங்களே
எஞ்சாமி. சாமி என்று கதறினாள்
(களபலி, ப- 20)

ஆண் பிள்ளையைக் காப்பாற்றுவதற்காகத் தான் பெற்ற பெண் பிள்ளையைப் பலிகொடுக்கிறார் சாந்தாவின் கணவர். தனக்குத் தெரியாமல் நடந்த இக்கொடுமைப் பற்றி உண்மை தெரிந்த போதும் ஏன் என்று கூட கணவரை எதிர்த்து கேட்கும் குரலற்றவளாகச் சாந்தா இருக்கிறாள். இதற்குக் காரணம் சமூகத்திலும் சரி, வீட்டிலும் சரி வம்ச விருத்தி என்பது ஆண் பிள்ளை சார்ந்தது. என்ற ஆணாதிக்க எண்ணம் மேலோங்கி இருப்பதே காரணமாகும். ஆணாதிக்க வர்க்கம் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக எத்தகையைக் கொடுமையையும் செய்யும் என்பதை “களபலி” சிறுகதை மூலம் கவிப்பித்தன் எடுத்துரைக்கிறார்.

இச்சமூகம் ஆணாதிக்கவர்க்கமும் பெண்ணையும் அவளின் உணர்வுகளையும் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. என்பதை சாந்தா கதாபாத்திரத்தின் மூலம் அறிய முடிகிறது. தன் மகள் புதைக்கப்பட்ட குழியைத் தோண்டி அவளின் நீண்ட முடியை மட்டும் எடுத்து வந்து யாருக்கும் தெரியாமல் தலையனையில் வைத்து தான் சாகும்வரை தன் தாய்மை பாசத்தை அத்தலையனையின் அணைப்பிலும், கண்ணீரிலும் மட்டுமே வெளிப்படுத்துகிறாள் சாந்தா.

ஆண்கள் நிலையைக் காட்டிலும் பெண்கள் சமூக நிலையில் தாழ்ந்தவர்களாக, ஆணாதிக்கத்திற்கு உட்பட்டவர்களாகவே நடத்தப்படுகின்றனர். கல்வியும், பொருளாதாரமுமே பெண்களுக்குத் தனியாக இயங்கும் ஆற்றலையும் தனித்தன்மையையும் தரும். இவை இரண்டும் மறுக்கப்பட்ட பெண்கள் தாழ்ந்து வாழவேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுகிறார்கள். (ஆர்.அனுராதா, தமிழ் சிறுகதைகளில் பெண்ணியம், ப-28) என்ற ஆர். அனுராதாவின் கூற்று சாந்தா கதா பாத்திரத்திற்குப் பொருந்துவதாக அமைகிறது.

முடிவுரை

ஒரு பெண் திருமணம் ஆகும் வரை தன் தந்தையைச் சார்ந்து வாழ்கிறாள். வயதான காலத்தில் மகனைச் சார்ந்து வாழ்கிறாள் என்ற கருத்து சமூகத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இதன் காரணமாகவே பெண்கள் ஆணுக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது. ஒரு பெண்ணின் வாழ்வு அவளின் கணவனைச் சுற்றியே அமைய வேண்டும் எந்நிலையிலும் பெண் தனித்து இருப்பது நல்லதல்ல என்ற பண்பாட்டைப் பெண்கள் பின்பற்ற வேண்டும் என ஆணாதிக்கச் சமூகம் விரும்புகிறது. இந்நிலை மாற வேண்டும் என்பதே கவிப்பித்தனின் துளிர்ப்பு, களபலி சிறு கதைகள் வெளிப்படுத்துகின்றன.

பார்வை நூல்கள்

1. கவிப்பித்தன், பாலி சிறுகதைத் தொகுப்பு, டிசம்பர் (2021), வம்சி புக்ஸ், திருவண்ணாமலை.
2. முனைவர் தி. செந்தழிழ்ச்செல்வி, மணிக்கொடி சிறுகதைகளில் மகளிர், (டிசம்பர், 2021), குடியரசி பதிப்பகம், குரோம்பேட்டை சென்னை.
3. அரங்க மல்லிகா, தமிழ் நாவல்களில் பெண்ணியம், (பிப்ரவரி -2009), நியூ செஞ்செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், அம்பத்தூர், சென்னை.
4. அரங்க மல்லிகா, தமிழ்ச் சிறுகதைகளில் பெண்ணியம், (டிசம்பர் - 2008) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை.